





கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட ஒகி புயலினால் சேதமடைந்த நிலையிலும், மாவட்ட ஊராக வளர்ச்சி முகமையின் துரித நடவடிக்கையின் மூலம் உடனடியாக சீரமைக்கப்பட்ட நிலையில் உள்ள முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பீளி குளம் கிராம சாலையினை படத்தில் காணலாம்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் பாதிக்கப்பட்ட நீரோடி மீனவ கிராமத்தில் நடைபெற்று வரும் சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். உடன் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மை செயலாளர் திரு.ககன்தீப்சிங் பேடி இ,ஆ,ப., அவர்கள் உள்ளார்.



ஓகி புயலினால் பாதிக்கப்பட்டு, இலட்சதீவு கவரெட்டி பகுதியில் கரை சேர்ந்து, கப்பல் மூலம் இன்று (09.12.2017) பாதுகாப்பாக கொச்சின் துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ள தமிழகத்தை சார்ந்த மீனவர்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல ஏதுவாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆணையர் திரு. வி.அருண்ராய்,இ.ஆ.ப.,அவர்கள், உதவித்தொகையாக தலா ரூ.2,000/- வழங்கி வழியனுப்பி வைத்தபோது எடுத்த படம்.




கன்னியாகுமரி மாவட்டத்தில், ஓகி புயலால் பாதிக்கப்பட்ட தூத்தூர் மீனவ கிராமத்தில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் போதுமான மருந்து இருப்புகள் குறித்தும், போதுமான மருத்துவ உபகரணங்கள் குறித்தும் கூடுதல் கண்காணிப்பு அலுவலர் முனைவர் திரு. இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.




கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட மார்த்தாண்டன்துறை மீனவ கிராமத்தில் நடைபெற்று வரும் தூய்மைப்பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன் சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். உடன் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மை செயலாளர் திரு.ககன்தீப்சிங் பேடி இ,ஆ,ப., அவர்கள் உள்ளார்





கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் பாதிக்கப்பட்ட தூத்தூர் மீனவ கிராமத்தில் வேலைவாய்ப்பு பயிற்சித்துறை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி இ.ஆ.ப, அவர்கள் சென்று மீனவ மக்களின் குறைகளை கேட்டறிந்தார். உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் தகவல் தொழில் நுட்பத்துறை முதன்மை செயலாளர் திரு. டி.கே.இராமசந்திரன் இ.ஆ.ப, கூடுதல் கண்காணிப்பு அலுவலர் முனைவர் திரு. இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மைச்செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்லைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.